# பிரதமமந்திரியின் திறன் வளர்ப்பு மைய துவக்க விழா



▶ விக்கிரவாண்டி சூர்யா கல்வி குழுமவளாகத்தில் நடந்த பிரதம மந்திரியின் திறன் வளர்ப்பு மைய விழாவை விசாலாட்சி பொன்முடி துவக்கி வைத்தார். அருகில் ராதா மணி எம்எல்ஏ, கல்லூரி செயலாளர் அசோக்சிகாமணி.

விக்கிரவாண்டி, டிச. 21: விக்கிரவாண்டி சூர்யா கல்வி குழுமவளாகத்தில் பிரதம மந்திரியின் திறன் வளர்ப்பு மையத்துவக்க விழா நடந்தது. விழாவை பிரதமர் நரேந்திரமோடி காணொளி காட்சி மூலம் தொடங்கிவைத்தார். இந்த திறன் வளர்ப்பு மையத்தின் மூலம் 7 பாடப்பிரிவுகளில், இலவச பயிற்சி அளிக்கப்பட்டு வேலை வாய்ப்பினை பெற்றுத்தரப்படுகிறது. கல்லூரி செயலாளர் அசோக்சிகாமணி, விசாலாட்சி பொன்முடி ஆகியோர் வரவேற்றனர். சிறப்பு விருந்தினர் பெங்களூர் யூடில் டெக்னாஜிஸ் சிஇஓ சீனுவாசராஜீ அவர்கள் இலவச பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு பற்றி விளக்கினார்.

விழுப்புரம் வேலை மாவட்ட வேலை வாய்ப்பு துறை அதிகாரி துரை வாழ்த்துரை வழங்கினார். விக்கிரவாண்டி சட்டப் பேரவை உறுப்பினர் ராதா மணி சிறப்புரையாற்றினார். சென்னை மண்டல பாட மேலாளர் கண்ணன் நன்றி கூறினார். இதில், பல்வேறு கல்லூரிகளை சேர்ந்த நிறுவனத்தலைவர்கள், பேராசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள், ஜெய்சங்கர், வெங்கடேஷ், அன்பழகன், பாலாஜி, மலர்க்கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சந்தானகிருஷ்ணன் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார்.